**செய்தி வெளியீடு எண்: 643** **நாள்: 11.09.2018**

## செய்தி வெளியீடு

**சென்னை சமூகப் பாதுகாப்புத்துறையின் மூலம் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தில் கீழ்கண்ட பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் (முற்றிலும் தற்காலிக பணியிடம்) நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம்.**

**மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**

1. கணக்கு அலுவலர் (Accounts Officer) –1 பணியிடம்
   (தொகுப்பூதியம் ரூ.17,500/– ஒரு மாதத்திற்கு
2. கணக்கு உதவியாளர் (Accounts Assistant) – 1 பணியிடம்
   (தொகுப்பூதியம் ரூ, 10,000/– ஒரு மாதத்திற்கு)

**<u>கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:</u>**

1. **கணக்கு அலுவலர் (Accounts Officer) (1 பணியிடம்)**

**பணி அனுபவம்:–**

- ஏதேனும் நிறுவனத்தின் கணக்குகள் துறையில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
  (அல்லது)
- அரசு அலுவலகத்தில் உதவி கணக்கு அலுவலர் அல்லது அதற்கு மேலான பதவிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நபர்களாக இருக்க வேண்டும்.
- இதற்கு முன் வேலை பார்த்த அலுவலகத்தில் இருந்து நடத்தை சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**வயது வரம்பு:–**

- 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
  (அல்லது)
- அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் நிகழ்வில் 62 வயதிற்கு மிகாமல் இருக்கவேண்டும். இந்நிகழ்வில் தனியர் அதிகபட்சமாக 62 வயதினை நிறைவு செய்யும் வரை மட்டுமே தற்காலிகமாக பணியாற்ற இயலும்.

2. **கணக்கு உதவியாளர் (Accounts Assistant) (1 பணியிடம்)**

**அடிப்படை கல்வி தகுதி** – பன்னிரண்டாம் வகுப்பு வர்த்தகம் மற்றும் கணக்கு பாடப்பிரிவு (10 +2 முறையில் கல்வி பயின்றவர்கள்) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**பணி அனுபவம்–**

- ஏதேனும் நிறுவனத்தின் கணக்குகள் துறையில் 2 வருட அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.
- இதற்கு முன் வேலை பார்த்த அலுவலகத்தில் இருந்து நடத்தை சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**வயது வரம்பு :**40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்கள் http://www.tn.gov.in/department/30அல்லது http://www.tn.gov.in/job_opportunityஅல்லதுhttp://www.socialdefence.tn.gov.in/ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் 20.09.2018 மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

ஆணையர் / செயலாளர்,
மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்,
சமூகப் பாதுகாப்புத்துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–10

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**